தி இந்து
இந்து டாக்கீஸ்
உலகத் திரை உலா
வெள்ளி, பிப்ரவரி 2, 2018
facebook.com/HinduTalkies | www.tamil.thehindu.com | twitter.com/hindutalkies

இதுதான் சமூக வீழ்ச்சி!

நேர்காணல்: இயக்குநர் மோகன் ராஜா

■ ஆர்.சி.ஜெயந்தன் ■

நம்பர் ஒன் இடத்துக்கான வியாபாரப்போட்டியில் நுகர்வோரைப் பலியாடுகள் ஆக்கும் தவறான நிறுவனங்களைத் துணிவுடன் விமர்சனம் செய்தது மோகன் ராஜா இயக்கத்தில் வெளியாகி வெற்றி பெற்ற 'வேலைக்காரன்' திரைப்படம். தற்போது நடிகர் விஜயைச் சந்தித்துத் திரும்பியிருக்கும் மோகன் ராஜாவைச் சந்தித்து உரையாடியதிலிருந்து….

நாயகனைவிட வில்லனை வலிமையானவனாகப் படைக்க வேண்டும் என்ற உந்துதல் உங்களிடம் அதிகமாக இருக்கிறது. தமிழ் சினிமா உருவாக்கி வைத்திருக்கும் நடைமுறையை உடைக்க விரும்புகிறீர்களா?

சினிமா என்பதே அதன் த்ரில்லுக்காகவே ரசிக்கப்பட்டு வரும் கலை. ஹீரோவை ஜெயிக்கவைப்பதே ஹீரோயிசம் என்பது தவறாகப் பதிவு செய்யப்பட்டுவிட்ட ஒரு கருத்து. கதாநாயகன் ஜெயித்துக்கொண்டே இருப்பது பார்வையாளர்கள் மத்தியில் ஒரு கட்டத்தில் சலிப்பை ஏற்படுத்திவிடும். கதைக்கான ஹீரோயிசம் மனத்தடை இல்லாமல் ரசிக்கப்பட்டுவிடும். கதையை மீறிய ஹீரோயிசம் எப்போதுமே எடுபடாது. 'தனி ஒருவன்' படத்துக்கு புராணக் கதாபாத்திரமான இரணியன்தான் எனக்கு இன்ஸ்பிரேஷன். வில்லனை அழிப்பதற்குக் கடவுளே அவதாரம் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எப்போதெல்லாம் அநியாயம் தலைதூக்குகிறதோ அப்போதெல்லாம் அவதாரம் எடுக்கிறார் என்பது நம்பிக்கை. அநியாயத்தின் கொடூரத்தைக் காட்டும்போதுதான் அங்கே அவதாரத்துக்கான அவசியம் வருகிறது. ஹீரோவை ஒரு அவதாரமாக நிறுவ வேண்டுமென்றால் வில்லனை ஹீரோவைவிடச் சக்தி வாய்ந்தவனாகக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது இல்லையா? ஆங்கிலப் படங்களை எடுத்துக்கொள்ளுங்கள், ராபர்ட்டி நீரோ ஒரு படத்தில் ஹீரோவாக நடித்தால் இன்னொரு படத்தில் வில்லனாக நடிப்பார். அல் பாச்சினோ நீரோவின் படத்தில் ஹீரோவாக நடித்தால் அவரது அடுத்த படத்தில் இவர் வில்லனாக நடிப்பார். மல்டி ஸ்டாரர் என்பது உருவான காலத்திலிருந்தே கதாபாத்திரங்களைப் பகிர்ந்துகொள்ளும் இந்த நடைமுறை ஹாலிவுட்டில் இருக்கிறது. எல்லாக் காட்சிகளிலும் ஹீரோ இருக்க வேண்டும் என்று தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட ஹீரோயிசம் இன்னும் நம்மிடம் இருக்கவே செய்கிறது. சவால் சரியாக அமையும்போதுதான் ஹீரோவின் சாதனை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக மாறும். கதாபாத்திர உருவாக்கத்தில் அடிப்படையான இந்த அம்சத்தைத்தான் நான் பின்பற்றிவருகிறேன்.

மிகையும் வீக்கமும்தான் ஹீரோயிசம் என்று இங்கிருக்கும் பல முன்னணிக் கதாநாயகர்களே நம்பிக்கொண்டிருக்கிறார்களோ?

இந்த இடத்தில்தான் என் தம்பி எனது பலமாக அமைந்துவிட்டான். ஒரு இயக்குநரும் நடிகனும் அண்ணன் தம்பியாக இருக்கும் அதிர்ஷ்டத்தால் கதாநாயகனை ஒரு கதாபாத்திரமாக என்னால் உருவாக்க முடிந்தது. நட்சத்திரமாக இருக்கும் தம்பியை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற முழுச் சுதந்திரம் அண்ணனாக எனக்கு இருக்கிறது. தம்பியும் என்னை நம்புவதன் மூலம்தான் இது சாத்தியமாகியிருக்கிறது. என் தம்பி நடித்த படங்களிலேயே மிகச்சிறந்த ஒன்றை நான் இயக்கினேன் என்ற பெயரை அவனுக்குப் பெற்றுத்தர என்னால் முடிந்ததென்றால் அதற்கு அவன் முன்னணிக் கதாநாயகனாக இருப்பதும் ஒரு முக்கியக் காரணம். 'தனி ஒருவ'னில் ரவி ஏற்ற மித்ரன் கதாபாத்திரத்தின் தேடல்தான் அரவிந்தசாமி ஏற்ற சித்தார்த் அபிமன்யூ கதாபாத்திரம். தமிழ் சினிமாவில் தனது எதிரியைத் தேடிய முதல் கதாநாயகன் மித்ரன். தன்னைவிட எல்லாவிதத்திலும் பலம் வாய்ந்தவனாக இருக்கும் சித்தார்த் அபிமன்யூ கதாபாத்திரத்தால் கவரப்படுபவனாக நாயகன் மித்ரன் இருக்கிறான். ரவியைப் போலவே எனது நாயகர்களாக அமைந்த விஜய் என்றாலும் சிவகார்த்திகேயன் என்றாலும் என்னிடம் சாதாரணமாக இயல்பாக நண்பர்களாகப் பழகினார்கள். ரவி தன்னை எப்படி என்னிடம் எப்படி ஒப்படைத்துவிட்டு அமைதியாக இருப்பானோ அப்படித்தான் அவர்களும் என்னை மதித்தார்கள். இது என் அதிர்ஷ்டம்.

'வேலைக்காரன்' படத்தில் கதாநாயகன் ஒரு சாமானிய இளைஞர். முக்கிய சவாலுக்கு விடை காண முயலும் அவரது போராட்டம் ஒரு அறிமுக நாயகனுக்கு எடுபட்டிருக்குமா?

நிச்சயம் எடுபட்டிருக்கும். சிவகார்த்திகேயனின் சில தனித்திறமைகளை நான் திரைக்கதைக்குப் பயன்படுத்திக்கொண்டேன். ஆனால், கதாநாயனுக்காகச் செய்யப்பட்டவை என்று பார்வையாளர்கள் உணர்ந்தால் ஒரு திரைக்கதை எழுத்தாளராக நான் தோற்றுவிட்டேன் என்று அர்த்தம். திரைக்கதைக்குப் பொருந்தாத எதுவொன்றையும் துறுத்தலாகத் திணிக்கும் பழக்கம் என்னிடம் கிடையாது. சிவகார்த்திகேயன் ஏற்ற அறிவு கதாபாத்திரம் நமக்கு மத்தியில் வாழ்பவன்தான். ஒரு சாமானியன் 'நான் பத்துபேரில் ஒருத்தனாக இருக்க மாட்டேன்' என்று முடிவுசெய்துவிட்டால் அது அவ்வளவு ஈஸி கிடையாது, அவன் தனித்து நின்று போராடி ஜெயிக்க முடியாது. நிறைய அவமானங்களைச் சூழ்ச்சிகளை, இழப்புகளைத் தாண்டித்தான் அவன் சாதிக்க முடியும் என்பதைச் சொன்ன கதாபாத்திரம். சிவகார்த்திகேயன் தனது நட்சத்திர அந்தஸ்துக்கு எதிர்நிலையில் நின்று செய்த கதாபாத்திரம். அவருக்கு இது அறிமுகப்படமாக இருந்திருந்தாலும் நிச்சயம் எடுபட்டிருக்கும்.

உணவுத் தயாரிப்புத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் நினைத்தால் விஷமில்லாத பொருட்களைத் தயாரிக்கலாம் என்ற தீர்வை 'வேலைக்காரன்' படத்தில் கூறியிருக்கிறீர்கள். முதலாளிகளை மீறி தொழிலாளர் வர்க்கம் இதைச் செய்ய முடியும் என்று நினைக்கிறீர்களா?

மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உருவானதுதான் வேலை. காலப்போக்கில் மனிதனுக்கான தேவையைச் செயற்கையாக அதிகரிக்கச் செய்வதற்கான ஒன்றாக வேலையின் அடிப்படைத்தன்மை மாறி நிற்கிறது. இது காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றம்தானே என்று நாம் அலட்சியப்படுத்தியதால் இன்று நம் உணவையே இந்த மாற்றம் பாதித்துவிட்டது. இதைவிடப் பெரிய சமூக வீழ்ச்சி என்று அதுவும் இருக்க முடியாது. நாம் என்ன உண்ண வேண்டும் என்பதை நிறுவனங்கள் முடிவு செய்யக் கூடாது என்பதைக் காட்டத்தான் நான் இந்தத் தலைப்பை எடுத்துக்கொண்டேன். நான் முன்வைத்த தீர்வு என்று வருகிறபோது, தொழிலாளியின் விசுவாசம் என்ற மந்திரம்தான் முதலாளியுடன் பிணைத்து வைக்கிறது, அந்த விசுவாசத்தைத் தொழிலாளி ஒழுங்காகக் கையாண்டால் சில அடிப்படைத் தவறுகளை அவனே களைந்துவிட முடியும் என்பதைச் சுட்டிக்காட்டினேன். டிவிசன் ஆஃப் லேபர் என்ற பெயரில் 'நான் மூடிதானே செய்றேன்', 'நான் பாட்டில்தான் செய்கிறேன்', 'நான் லேபிள்தானே ஒட்டுறேன்' என்று முதலாளியால் பிரித்துப் பிரித்து வேலை வாங்கப்பட்டாலும் ஊதியம் தந்துவிட்டு நம்மை வைத்துத் தவறு செய்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டால் அதன் பிறகு எந்தத் தொழிலாளியும் குற்ற உணர்ச்சியுடன் தவறுகளைத் தொடர்ந்து செய்ய மாட்டான். செய்ய மனசாட்சி இடம்கொடுக்காது என்பதையே சுட்டிக்காட்டினேன்.

வணிகச் சமரசங்கள் இல்லாமல், ஒரு முழுமையான சமூக அக்கறை கொண்ட படத்தை இயக்குவதில் உங்களுக்குத் தயக்கம் இருக்கிறதா?

நிச்சயமாக இல்லை. அதை நோக்கிய பயணத்தில் 'தனி ஒருவன்' ஒரு படிக்கட்டு என்றால் அது கொடுத்த தைரியத்தில்தான் 'வேலைக்காரன்' படத்தை இரண்டாவது படியாகப் பார்க்கிறேன். எனது அடுத்தடுத்த முயற்சிகள் அதை நோக்கியதாகவே இருக்கும். சினிமா வணிக அம்சங்கள் என்பதில் இங்கே பல தவறான புரிதல்கள் இருக்கின்றன. இதைத்தான் ஆடியன்ஸ் கேட்கிறார்கள் என்று நாம் பலகாலமாக வேறு ஊருக்குப் போய்விட்டோம். நம் சினிமா நிச்சயம் மாறும் உண்மையிடம் திரும்பிவரும்.

ஜெயம் ரவி, விஜய்க்குப் பிறகு தற்போது சிவகார்த்திகேயனை இயக்கியிருக்கிறீர்கள். அஜித், விஜய்சேதுபதி, மாதவன் மாதிரியான கதாநாயகர்கள் உங்கள் கூடையில் வந்து விழும்வரை காத்திருப்பதை விரும்புகிறீர்களா?

எனக்கும் காத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. இவர்கள் அனைவருமே சவாலான கதைகளில் வேலை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள். இவர்கள் அனைவருக்கும் என்னிடம் கதைகள் தயாராக இருக்கின்றன. அவர்களுடன் இணைந்து பணிபுரியும் நாட்கள் வெகுதொலைவில் இல்லை என்பது மட்டும் நிச்சயம்.

நடிகராக ஒரு படத்தில் தோன்றினீர்கள், தொடர்வதில் விருப்பம் இல்லையா?

ஆசியாவிலேயே ஒன்றாகப் பிறந்த குழந்தைகளுடன் நடிக்க வேண்டும் என்று விரும்பினேன். அதற்காகத்தான் 'என்ன சத்தம் இந்த நேரம்' படத்தில் நடித்தேன். இயக்குநர்களுக்கு நடிக்க வேண்டும் என்ற ஆசை இல்லாமல் இருக்காது. ஆனால், எனக்கு அந்த ஆசை இயக்கத்தைவிட மேலோங்கியது இல்லை. ஆனால், சவாலான கதாபாத்திரம் அமைந்தால் நிச்சயமாக நடிப்பேன்.

சமீபத்தில் விஜயைச் சந்தித்துத்து விட்டு வந்தது பற்றி?

விஜய் எனது ஆத்மார்த்த நண்பர். ஒரு இடைவெளிக்குப் பிறகு அவரைச் சந்தித்தபோது நிறைய பேசினோம். அதில் நாங்கள் அடுத்து இணைந்து பணியாற்றுவது பற்றிய பேச்சும் இருந்தது. மறக்க முடியாத மாலைநேரச் சந்திப்பு அது.

தனி ஒருவன் 2 ?

கண்டிப்பாக இருக்கிறது. தனி ஒருவன் கதையின் இரண்டாம் பாகத்துக்கான கதையை ஏற்கெனவே தீர்மானித்துவிட்டேன். அது அடுத்த படமா என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை.

ஒரு தென்னிந்தியத் தாண்டோட்டம்

திரைப் பார்வை : ஆதி (மலையாளம்)

■ ஆர்.ஜெய்குமார் ■

மலையாள சினிமா எதிர்பார்த்திருந்தது, நடந்திருக்கிறது. ப்ரனவ் மோகன்லால் நாயகன் ஆகிவிட்டார். அவர் நடித்துக் கடந்த வாரம் வெளிவந்த 'ஆதி' திரைப்படம் வரவேற்பைப் பெற்றுள்ளது.

'ஒன்னாமன்' படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் ப்ரனவ். 'புனர்ஜனி'யில் முழுநீளக் கதாபாத்திரத்தில் நடித்ததற்காகப் பெரும் பாராட்டைப் பெற்றவர். அதற்கு 15 வருடங்களுக்குப் பிறகு ஒரு முழுநீளக் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். 'த்ரிஷ்யம்' வெற்றிப் படத்தை இயக்கிய ஜீத்து ஜோசபின் படத்தை தன் நாயக அறிமுகத்துக்காக அவர் தேர்ந்தெடுத்தது படம் வெளியாவதற்கு முன்பே எதிர்பார்ப்பை உருவாக்கியிருந்தது.

த்ரில்லர் படத்துக்காகப் பெயர் பெற்றுள்ள ஜீத்து ஜோசப், இந்தப் படத்தை ஒரு கொலை, அதற்குக் காரணமானவனைத் தேடும் வேட்டை என வழக்கமான பாணியில்தான் நகர்த்தியுள்ளார். இதில் போலீசை விலக்கிவிட்டு, வில்லன் - நாயகன் எனத் திரைக்கதையில் நேர்கோட்டுப் பயணத்தைச் செய்திருக்கிறார். இதற்கிடையில் சந்தேகிக்கத் தூண்டும்விதமாகச் சில கதாபாத்திரங்களை உலவவிட்டிருக்கிறார். 'த்ரிஷ்யம்' போல இதிலும் சீரியல்தனமாக சாப்பாட்டு மேஜையில்தான் குடும்பத்தைச் சித்திரித்துள்ளார். சிறந்த குணச்சித்திர நடிகர்களான லெனா, சித்திக் ஆகியோரின் நடிப்பு இந்தப் படத்தில் கதாபாத்திரங்களுடன் பொருந்திப் போகவில்லை.

எதிர்பாராதவிதமாக நகைச்சுவை நடிகரான ஷிஜு வில்சன் அபாரமாக நடித்துள்ளார். பதற்றம் நிரம்பிய படத்தின் இரண்டாம் பாதியில் அனுஸ்ரீ தன் தயக்கமற்ற நடிப்பால் நிறைகிறார். உணர்ச்சியை அதிகம் வெளிப்படுத்தாத வகையில் புத்திசாலித்தனமாக ப்ரணவ் லாலுக்கான கதாபாத்திரத்தை உருவாக்கியுள்ளார் இயக்குநர். அதிர்ந்து பேசாத இயல்புடையவராகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்.

கொலை, கொலைசெய்பவர், அதற்குப் பின்னாலுள்ள சதி எல்லாமும் பார்வையாளர்களுக்கும் தெரியும்விதமாகத்தான் படம் பயணிக்கிறது. பார்த்துப் பார்த்து சலித்துப்போன பின்னணிதான் கதை. இருந்தாலும் படத்தைப் பார்ப்பதற்கான தேவையைத் திரைக்கதை தக்கவைத்துக்கொண்டுள்ளது.

மோகன்லால் அறிமுகமான 'மஞ்சில் விரிஞ்ச பூக்கள்' படப் பாடலான 'மிழியோரம் நனஞ்சொழுகும்' பாடலைப் பாடி ப்ரனவ் படத்தில் அறிமுகமாகிறார். சினிமா இசையமைப்பாளர் ஆக வேண்டும் என்ற கனவுள்ள இளைஞர் வேடம் அவருக்கு. தென்னிந்திய சினிமா பிரபலங்கள் வந்துசெல்லும் பெங்களூருவில் ஒரு கிளப்பில் பாடினால் சினிமா வாய்ப்பு கிடைக்கும் என நம்பி அங்கு செல்கிறார். பாட்டும் பாடுகிறார். ஆனால், அதன் பிறகு அவர் கனவு வாழ்க்கை மட்டுமல்ல; இயல்பான வாழ்க்கையும் பறிபோய்விடுகிறது.

ப்ரனவ் ஒரு சதியில் மாட்டிக் கொள்கிறார். அதிலிருந்து தப்பிக்க ஓடுகிறார். இந்த ஓட்டம்தான் படம். சாதாரண ஓட்டமல்ல அது, தாண்டோட்டம் (parkour). ப்ரனவ் சிறுவயதிலிருந்து இந்தத் தாண்டோட்டம் கற்று வருகிறார். 'ஒன்னாமன்' படத்தில் வர்கீஸ் கதாபாத்திரத்தைக் காப்பாற்ற சிறுவன் ப்ரனவ் அவன் அளவு இருக்கும் ஜன்னலைத் தாண்டிக் குதிப்பான். இந்தப் படத்தில் எதிரிகளிடமிருந்து தப்பிக்கத் தாண்டோட்டம் ஓடுகிறார்.

ப்ரனவ் இதைத் திறம்படச் செய்திருக்கிறார். நீளமான தாண்டோட்டக் காட்சிகள் படத்தின் சுவாரசியத்தைக் கூட்டுகின்றன. இதற்கு பெங்களூருவின் பரபரப்பான சந்தையும் தெருக்களையும் கைவிடப்பட்ட கட்டிடங்களையும் தேர்ந்தெடுத்துள்ளனர். விளையாட்டாகவும் தற்காப்புக் கலையாகவும் கற்றுக் கொடுக்கப்படும் இந்தக் கலை, 1998-ல் 'டாக்ஸி-2' படத்தில்தான் முதன்முதலாக சினிமாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஜெர்மன், பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் இந்த வகை படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. 'எக் தா டைகர்' போன்ற சில இந்திப் படங்களும் தாண்டோட்டத்தைச் சித்திரித்துள்ளன. 'பார்கோவ்', 'ஜம்ப் லண்டன்', 'டிஸ்ட்ரிக்ட் பி 13' உள்ளிட்ட பல படங்கள் இந்தத் தாண்டோட்டத்துக்காகவே கவனம் பெற்றன. 'ஆதி'யையும் இந்த வரிசையில் ஒன்றாக்க முயன்றிருக்கிறார்கள்.

CH-X

■ ஷங்கர் ■

▲ 'மலைக்கள்ளன்' படத்தில் எம்.ஜி.ஆர்

1. வசூல் நாயகன் எம்.ஜி.ஆர்

கோவையைச் சேர்ந்த பக்ஷிராஜா ஸ்டுடியோஸின் பெயர் சொல்லும் படமான 'மலைக்கள்ளன்', எம்.ஜி. ஆரை வசூல் நாயகனாக மாற்றியது. தமிழறிஞரும் கவிஞருமான நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, 'ராபின் ஹூட்' மற்றும் 'மார்க் ஆஃப் ஸாரோ' படைப்புகளின் உந்துதலில் இக்கதையை எழுதினார். 'கலைஞர்' மு.கருணாநிதி திரைக்கதை, வசனம் எழுதினார். எஸ்.எம்.நாயுடு இசையமைத்து டி.எம்.சவுந்திரராஜன் பாடிய 'எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே' என்ற பாடல் நமது சூழலுக்கு இன்றும் பொருந்தும் ஒன்று. தெலுங்கு, மலையாளம், கன்னடம், சிங்களம் என அனைத்து மொழிகளிலும் வெற்றிபெற்ற இத்திரைப்படத்தின் இந்தி வடிவத்தில் திலீப் குமாரும் மீனாகுமாரியும் இணைந்து நடித்தனர். முன்பின் அறிமுகமேயில்லாத ஒரு தயாரிப்பாளரான ஸ்ரீராமுலு நாயுடு, கோவையிலிருந்து மும்பைக்குத் வந்து தன்னை வைத்துப் படமெடுக்க ஆவலாக இருக்கிறார் என்ற ஆச்சரியத்தில் திலீப் குமார் ஒப்புக்கொண்ட இத்திரைப்படத்தின் பெயர் என்ன?

2. பூனையின் கண்கள் வழியே...

ஆயிரம் ஆண்டுகள் பழமையானது இஸ்தான்புல் நகரின் வரலாறு. ஓட்டோமான் பேரரசு காலத்திலிருந்து நவீன காலம்வரை பூனைகளையும் குடிமக்களாகப் பாவிக்கும் இஸ்தான்புல் நகரத்தின் வாழ்வியலை, பூனைகளின் கண்களிலிருந்து பார்க்கும் ஆவணப்படம் 'கேடி'. 2016–ம் ஆண்டு வெளியான இந்த ஆவணப்படம், இருண்ட விதானங்கள், கட்டிடக் கூரைகள், வீடுகளின் பால்கனிகள், ஜன்னல்கள், மொட்டை மாடிகளில் அலையும் பூனைகளின் வெவ்வேறு குணாதிசயங்களைக் கவித்துவத்துடன் காண்பிக்கும். செயடா டோருன் உருவாக்கிய இந்த ஆவணப்படத்துக்காகவே பூனைகளின் உயரத்தில் படம் பிடிப்பதற்காக கேமிரா தாங்கிகள் வடிவமைக்கப்பட்டன. வேகமாக நவீனமாகி வரும் ஒரு புராதன நகரத்தின் தொன்மையை நினைவில் வைத்திருக்கும் உயிர்களைக் குறித்த இந்த ஆவணப்படம் அமெரிக்காவில் 2.8 மில்லியன் டாலரைத் திரையரங்குகளிலேயே வசூலித்து வெற்றிபெற்றது. உலகிலேயே அழகிய நகரங்களில் ஒன்றாகக் கருதப்படும் இஸ்தான்புல்லின் எழிலை, பூனையின் கண்களின் வழியாகப் பார்க்கச் செய்த இந்த ஆவணப்படத்தை 2017–ல் வெளியான சிறந்த ஆவணப்படங்களில் ஒன்றாக எந்தப் பத்திரிக்கை தேர்ந்தெடுத்தது?

▲ 'லேண்ட்ஸ்கேப் இன் தி மிஸ்ட்'

3. பவுலோஸ் எனும் படைப்பாளி

இல்லாத தந்தையைத் தேடி பதின்வயதுச் சிறுமியும் அவள் தம்பியும் கிரீஸ் நகரத்திலிருந்து ஜெர்மனிக்குத் தனியாகப் பயணம் செல்கின்றனர். வாய்ப்புகளைத் தேடி ஒரு நாடகக் குழு வெவ்வேறு இடங்களுக்குப் பயணிக்கிறது. ஒரு நடிகன் அன்பைத் தேடி அலைகிறான். இன்றைய தலைமுறைக் குழந்தைகளுக்கு வன்முறையையும் பல்வேறு விதமான துயரங்களையும் தவிர உலகம் வேறெதைக் கொடுத்திருக்கிறது என்பதை 'லேண்ட்ஸ்கேப் இன் தி மிஸ்ட்' திரைப்படம் வழியாகப் பார்வையாளர்களிடம் எழுப்பியவர் தியோ ஆஞ்சலோ பவுலோஸ். நாடகப் பாங்கிலான காட்சிகள், உறைந்த ஓவியம் போன்ற காட்சிகள், மனத்தை உலுக்கும் படிமங்களுடன் தியோ ஆஞ்சிபோ பவுலோஸின் இயக்கம் இதைக் கலைப்படைப்பாக்கியது. யுத்தங்கள், முரண்பாடுகள், பாலியல் வன்முறைகளுக்கு நடுவே திணறும் மானுட நிலை குறித்து சினிமாவில் ஆத்மார்த்தமாக விசாரணை செய்த ஆந்த்ரேய் தார்க்காவெஸ்கி, இங்க்மர் பெர்க்மன், ராபர்ட் ப்ரெஸ்ஸான் ஆகிய முதல் வரிசை இயக்குநர்களின் பெயர்களுடன் இடம்பிடிப்பவர் பவுலோஸ். ஏதென்சில் பிறந்த படைப்பாளியான தியோ ஆஞ்சலோ பவுலோஸ் 1988–ல் எடுத்த இந்தப் படம் வெனிஸ் உலகத் திரைவிழாவில் எந்தப் பரிசைப் பெற்றது?

▲ 'கொடியேட்டம்' பட்டத்தில் கோபி, விலாசினி

4. சண்டைபோட்ட இசையமைப்பாளர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்காவில் நிலவிய சமூக அவலங்களில் முக்கியமானது கருப்பின ஒடுக்குமுறை. இதைப் பின்னணியாகக் கொண்டு குவெண்டின் டொரண்டினோ 2012–ல் இயக்கிய திரைப்படம் 'ஜாங்கோ அன் செய்ன்ட்'. ஜேமி பாக்ஸ், கிறிஸ்டோபர் வால்ட்ஸ், லியார்னடோ டி காப்ரியோ, கெர்ரி வாஷிங்டன் ஆகிய நட்சத்திரங்களின் அபாரமான நடிப்புக்காகப் பேசப்பட்டது இத்திரைப்படம். கருப்பின மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை ஒரு சுவாரசியமான வெஸ்டர்ன் மசாலா திரைப்படமாக குவெண்டின் டொரண்டினோ மாற்றிவிட்டார் என்றும் குற்றம்சாட்டப்பட்டார். இத்திரைப்படத்தில் வில்லன் வேடம் ஏற்று நடிக்க லியானர்டோ டிகாப்ரியோ முதலில் தயங்கினார். ஏனெனில், கொடூரமான கொலையாளியாகவும் இனவாத வசைகளைக் கூறுபவராகவும் அவரது வேடம் இருந்ததே காரணம். இயக்குநரின் தொடர்ந்த வற்புறுத்தலுக்குப் பின்னரே ஏற்றார். இப்படத்தின் இசையமைப்பாளர் என்னியோ மாரிக்கோனி, தனது இசையைச் சீர்மையில்லாமல் டொரண்டினோ உபயோகிப்பதாகக் குற்றம்சாட்டி அடுத்த படத்தில் பணியாற்ற மாட்டேன் என்று கூறினார். ஆனால் அதை மீறி, டொரண்டினோவின் அடுத்த படத்துக்கு இசையமைத்து ஆஸ்கரும் வென்றார். அந்தப் படம் எது?

▲ என்னியோ மாரிக்கோனியுடன் குவெண்டின் டொரண்டினோ

5. தேவைப்படாத பின்னணி இசை

மலையாளத் திரைப்பட இயக்குநர் அடூர் கோபாலகிருஷ்ணனின் இரண்டாவது திரைப்படம் 'கொடியேற்றம்'. தென்னிந்திய சினிமாவுக்கு ஒரு தனித்த ஆளுமையின் வருகையை உறுதிப்படுத்திய படைப்பு எனக் கொண்டாடப்படுகிறது. சாதாரணத் தோற்றம்கொண்ட கோபியை நாயகனாக நடிக்க வைத்து தேசிய விருதும் பெற்று பரத் கோபியாக்கிய திரைப்படம் இது. 1975–ம் ஆண்டிலேயே படத்தின் பணிகள் முடிந்துவிட்டாலும் கடுமையான நிதி நெருக்கடியால் இரண்டு ஆண்டுகள் கழித்தே வெளியானது. ஏ.வி.எம் லேபரட்டரியில் கொடுப்பதற்குப் பணம் இல்லாமல் படத்தையே வெளியே எடுக்க முடியவில்லை. கிராமத்தில் தங்கையின் உழைப்பால் வரும் கூலியில் சாப்பிட்டுவிட்டு வயதில் சிறியவர்களுடன் நாட்களைக் கழிக்கும் அசடனான சங்கரன் குட்டியின் வாழ்க்கையைத் தங்கையின் திருமணம் தடம் மாற்றுகிறது. ஒரு மனிதன் அடையும் முதிர்ச்சி அவனுடைய தங்கை, மனைவி, தோழி வழியாக நிகழ்கிறது. இந்திய சினிமாவில் பின்னணி இசையே இல்லாமல் வந்த முதல் திரைப்படம் இது. மேளச்சத்தம், பட்டாசு சப்தங்கள் மட்டுமே இப்படத்தின் பின்னணி. சங்கரன் குட்டியின் மனைவி சாந்தம்மாவாக நடித்த நடிகை யார்?

விடைகள்

1. ஆஸாத், 2. டைம், 3. வெள்ளிச் சிங்கம், 4. தி ஹேட்புல் எய்ட், 5. கே.பி.ஏ.சி. லலிதா

தாளத்திலிருந்து பிறக்கும் மெட்டு!

■ தாஜ்நூர் ■

ஒரு பாடலின் இசைக் கோவையை 'அரேஞ்மெண்ட்' செய்வதில் இசையமைப்பாளரின் கற்பனைக்கு மிகப் பெரிய பங்கிருக்கிறது. இதில் கைதேர்ந்தவர் ஏ.ஆர்.ரஹ்மான். இதைக் கண்கூடாக அருகிலிருந்து பார்த்து, கேட்டு உணர்ந்திருக்கிறேன். கம்போஸ் செய்யும்போது இசைக் கோவையின் ஒரு பகுதியாக இடம்பெறும் கார்ட்ஸ் அண்ட் பேட்ஸ் சவுண்ட்களை மிடி கீ போர்டுடன் இணைக்கப்பட்டிருக்கும் சவுண்ட் மாடியூல்களிலிருந்து (*sound modules*) ரஹ்மான் தேர்வு செய்திருப்பார். ஒரு கீ போர்டுடன் முப்பதுக்கும் அதிகமான மாடியூல்கள் ஒயர்கள் வழியே இணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு மாடியூலிலும் ஆயிரக்கணக்கான சேம்பிள் ஒலிகள் இருக்கும். ரஹ்மான் அவற்றிலிருந்து தோண்டித் துருவி ஒலிகளைத் தேர்வு செய்து தனது கீ போர்டில் அவற்றை 'புரோகிராம்' செய்திருப்பார். அவர் அப்படித் தேர்வு செய்த ஒலிகளில் எந்த ஒலிக்குப் பிறகு எது வர வேண்டும், அது எந்த மாடியூலில் எந்த லேயரில் இருக்கிறது, அதன் பெயர் என்ன, அதன் எண் என்ன என்று ஒரு நோட்டுப் புத்தகத்தில் நான் குறித்து வைத்துக் கொள்வேன். மறுநாள் திரும்பவும் அதை வாசிக்க அவர் வருவதற்குமுன், வரிசை மாறாமல் ரீகால் செய்து வைத்திருந்து தர வேண்டும். ரஹ்மானிடம் வேலைக்குச் சேர்ந்த புதிதில் நான் செய்த முதல் பணி இதுதான். இந்த இடத்திலிருந்தே ரஹ்மானிடம் நான் கற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டேன். கணினித் தொழில்நுட்பம் நன்கு அறிந்த ஒரு கம்போஸர் செய்யக் கூடிய எல்லா வேலைகளையும் ரஹ்மானிடம் கற்றுக்கொண்டேன்.

சவாலான சேம்பிள் உருவாக்கம்

இன்று சேம்பிள் தயாரிப்பு என்பது மிக மிக எளிதாகிவிட்டது ஆனால், 15 ஆண்டுகளுக்கு முன், இப்பணி மிகச் சவாலான ஒன்று. அதற்குக் காரணம் தொடக்க நிலையில் இருந்த தொழில்நுட்ப வளர்ச்சி. அப்போது வித்தியாசமான வாத்தியங்களை சேம்பிள் செய்து, அவற்றைக் கொண்டு வித்தியாசமாக கம்போஸ் செய்வதற்கு இவை பயன்படும். ஆனால், பாடலை ரஹ்மான் இறுதி செய்யும்போது சேம்பிள் செய்ததை லைவ் கருவிகள் கொண்டு வாசிக்கச் செய்து அதைப் பதிவு செய்து கொள்வார். இந்த முறைதான் அவரது பாடல்கள் வித்தியாசமும் அவற்றில் இடம்பெறும் ஒலிகள் தரமும் கொண்டவையாக இருக்கக் காரணம். சேம்பிள் உருவாக்குவதில் இருந்த நேர்த்தியைக் கண்ட ரஹ்மான், 'லண்டலின் உள்ள முக்கியமான சேம்பிள் நிறுவனத்தில் என்னைச் சேர்த்துவிட்டுமா' என்று கிண்டலாகக் கேட்டார்.

வெள்ளிதோறும் நாங்கள் பள்ளிவாசலுக்குச் செல்லும்போது ஒருமுறை நான் கம்போஸ் செய்து நானே ட்ராக் பாடியிருந்த ஒரு சிறு பாடலை அவரது அனுமதி இல்லாமல் காரில் ஒலிக்கவிட்டேன். ஓய்வாக வண்டியில் சாய்ந்திருந்தவர் அதைக் கேட்டுச் சட்டென்று எழுந்து உட்கார்ந்துவிட்டார். கேட்டு முடித்ததும் "இதை நீ பாடினாயா?" என்றார். நான் சங்கோஜத்தில் நெளிந்தேன். உடனே அவர் " இசையமைப்பதற்கான தகுதி உன்னிடம் இருக்கிறது" என்று மனதாரப் பாராட்டினார். நான் கற்றுக்கொள்ள வேண்டிய நிறைய விஷயங்களைச் சுட்டிக்காட்டினார். நான் மெய்சிலிர்த்துப்போனேன்.

- சவுண்டை பிரசெண்ட் செய்வதில் ரஹ்மான் முன்மாதிரிகளை உருவாக்கியவர்.
- ஒலிகளைத் தேர்வு செய்வதில் ரஹ்மானின் ரசனையையும் பொறுமையையும் நான் அருகிலிருந்து பார்த்திருக்கிறேன்.
- உன்னிடம் கம்போஸிங் திறமை இருக்கிறது என்று பாராட்டினார்.

முன்மாதிரி

ரஹ்மானிடம் நான் பெரிதும் வியந்தது இன்றும் வியப்பது அவரது தொழில்நுட்ப அறிவு. அன்றாடம் வந்து கொண்டே இருக்கும் தொழில்நுட்பங்களை உடனுக்குடன் தெரிந்து கொண்டு தன்னை அப்டேட் செய்து கொள்வதில் இன்றுவரை அவரது ஆர்வம் தணியவில்லை. சவுண்டை பிரசென்ட் செய்வதில் ரஹ்மான் முன்மாதிரிகளை உருவாக்கியவர். இதற்குப் பல உதாரணங்களைச் சொல்லலாம். 'காதல் தேசம்' படத்தில் இடம்பெற்ற 'முஸ்தபா முஸ்தபா' பாடலில் ட்ரம்ஸ் ஒலியை ஆஃப் வேயில் கட் செய்து அதை வித்தியாசமாக ஒலிக்கச் செய்திருப்பார். முதன்மையான வாத்தியங்கள் என்று வருகிறபோது எல்லோரும் பயன்படுத்தும் வாத்தியங்களைத்தான் ரஹ்மானும் பயன்படுத்துகிறார். ஆனால், அவற்றின் ஒலிகளைக் கையாளும் விதமும் அதைப் பிரசெண்ட் செய்யும் விதமும் அவரிடம் எதிர்பார்க்க முடியாத கற்பனையுடன் வெளிப்பட்டிருப்பதைக் காண முடியும். அதேபோல ஒரு ஒலிக்கும் மற்றொரு ஒலிக்கும் இடையில் இருக்க வேண்டிய 'கிளாரிட்டி'க்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார். இசைக் கோவையில் எந்தவொரு சிறிய ஒலியும் புதைந்துபோய்விடக் கூடாது என்பதில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்வார். இதற்காக வேறுவேறு ஒலிப்பதிவு முறைகளை முயன்று பார்ப்பார். சில ஒலிகள் கேட்கவில்லை என்றால் எந்த ஒலிப் பதிவு முறையில் அவை தெளிவாகக் கேட்கின்றன என்று முயன்றுபார்த்து, அதில் பதிவு செய்ய அதிக நேரம் எடுத்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல், " இதில்தான் துல்லியமாக இருக்கிறது, இதையே பின்பற்றுவோம்" என்று கூறி அதை வலியுறுத்துவார்.

ஒலிகளின் தேர்வு

ஒலிகளைத் தேர்வு செய்வதில் ரஹ்மானின் ரசனையையும் பொறுமையையும் நான் அருகிலிருந்து பார்த்திருக்கிறேன். ஒரு சேம்ளரில் ஆயிரத்துக்கும் அதிகமான ஒலிகள் பதிவு செய்யப்பட்டிருந்தால் ஒவ்வொன்றாகப் பொறுமையாகக் கேட்டு, அதிலிருந்து தனக்குத் தேவையான ஒன்றே ஒன்றை எடுப்பார். அதை கீ போர்டில் வாசிக்கும்போது அதன் தன்மை, அசலைவிடச் சிறந்த ஒன்றாக அவரது கைவண்ணத்தில் மாறிவிட்டிருக்கும். இப்படி இருந்த சேம்பிள் ஒலி முற்றிலும் வேறு வடிவத்துக்கு மாறிவிட்டதே என்று நாம் வியக்க வேண்டியிருக்கும். அதேபோல் சேம்பிளர் சந்தையில் ஒரு தயாரிப்பு புதிதாக அறிமுகப்படுத்தப்படுகிறது என்றால் அவற்றைக் கிளறிப்பார்த்து, ரத்தினங்களை மட்டும் அதிலிருந்து விரைவாக எடுத்துக் கொள்ளும் ஆற்றல் அவருக்கு இருக்கிறது. ஒரு புதிய சேம்பிளர் சிடியில் ஆயிரக்கணக்கில் ஒலிகள் இருக்கின்றன என்றால் அவற்றில் பத்து ஒலிகள்தான் தேறும் என்றால் அந்தப் பத்தையும் எவை எவை என்று கண்டுபிடித்து அவற்றை முதலில் பயன்படுத்திவிடும் வேகம் ரஹ்மானுக்கே உரியது.

மெட்டுக்கு முன்பே தாளம்

ஒரு கம்போஸராக ரஹ்மானிடம் நான் மிகவும் ரசித்த ஒன்று அவரது ரிதம் கம்போஸிங். ஒரு பாடலுக்கான மெட்டை கம்போஸ் செய்யும்முன் அதற்கான தாளக்கட்டைத்தான் முதலில் கம்போஸ் செய்வார். கதையைக் கேட்டபின் பாடலுக்கான சூழ்நிலைகளைத் தனித்தனியே மனதில் உள்வாங்கிக்கொண்டு ஒரு புள்ளியிலிருந்து அவர் முதலில் தாளத்தை உருவாக்கி, அந்தத் தாளத்துக்குள் ஒளிந்திருக்கும் மெட்டை வெளியே எடுத்துவருவார்.

ஒரு சிறந்த மெட்டு எந்த அளவுக்கு ஈர்க்கிறதோ அதே அளவுக்கு மெட்டுக்கு இடையில் வரும் பேக்கிங் என்று நாங்கள் சொல்கிற இசைக் கோவையும் ஈர்க்க வேண்டும். இதைத்தான் அரேஞ்மெண்ட் என்றும் சொல்கிறோம். இவற்றிலும் மெட்டுக்களின் தன்மை இழைந்தோடும். மெட்டுக்கு இணையான ஈர்ப்பு கொண்ட இசைக் கோவையை வழங்கியதில் தனித்து நின்றவர் இளையராஜா என்றால் அதை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றார் ரஹ்மான். அவரது இசைக் கோவையிலிருந்து பலர் பல மெட்டுகளை உருவாக்கியிருக்கிறார்கள். ரஹ்மானின் இசைக் கோவை பணிகளில் நான் வேலை செய்த அனுபவங்கள் ஏராளம்.

'பாபா' பட அனுபவம்

லண்டனில் இருந்தபடி ரஹ்மான் 'பாபா' படத்துக்காகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது நான் ஸ்டுடியோவில் பொறுப்பில் இருக்கிறேன். ஒரு டியூனை கம்போஸ் செய்து பாடி அனுப்பியிருந்தார். அதற்குக் கவிஞரிடம் வரிகளை எழுதி வாங்கி, பாடலுக்குக் கூடுதல் பார்ட்ஸ் (parts) எல்லாவற்றையும் சேர்த்து பாடகர் கார்த்திக்கை ட்ராக் பாட வைத்து அதைப் பதிவுசெய்து ரஹ்மான் சாருக்குத் திரும்ப அனுப்பி வைத்தேன். ரஜினி அற்புதமாக நடனமாடியிருந்த 'மாயா மாயா எல்லாம் மாயா' என்ற பாடல் அது. பாடலை அனுப்பி இரண்டு நாட்கள் வரையிலும் ரஹ்மான் சாரிமிருந்து எந்தப் பதிலும் இல்லை. படக் குழுவிலிருந்து 'பாட்டு என்ன சார் ஆச்சு' என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். நாம் செய்த வேலை ரஹ்மான் சாருக்குப் பிடிக்காமல் போய்விட்டதோ என்று குழம்பிக் கொண்டிருந்தேன். மூன்றாம் நாள் ரஹ்மானிடமிருந்து போன் வந்தது. " பாடல் ரொம்ப ரொம்ப நல்லா இருக்கு. வெரிகுட்..." என்றார். அதன் பிறகு உதித் நாராயணனையை அழைத்து இந்தப் பாடலைப் பதிவு செய்தார். பிறகு ரஹ்மான், இயக்குநர், ரஜினி ஆகியோர் ட்ராக் பாடிய கார்த்திக்கின் குரலே இந்தப் பாடலுக்குப் பொருத்தமாக இருக்கிறது என்று முடிவு செய்து அவரையே பாட வைத்தனர். இந்த 'மாயா' பாடல்தான் கார்த்திக்கு அடையாளம் கொடுத்தது. மேலும், அதே படத்தில் மற்றொரு பாடலைப் பாடவும் அவருக்கு வாய்ப்பாக அமைந்தது. கார்த்தி போன்ற 'தகுதியான திறமைகளைத் தேர்வு செய்து, அவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதில் ரஹ்மானை மிஞ்ச யாருமில்லை. அப்படிப்பட்ட ரஹ்மான் உள்ளிட்ட சில கம்போஸர்களின் இசைக்கு மட்டும்தான் இன்று ஆடியோ சந்தையில் விலை கிடைக்கிறது. கணினி தொழில்நுட்பம் வளர்ந்த பிறகு ஆடியோ சந்தையை அது புரட்டிப் போட்டுவிட்டது. அதைப் பற்றி அடுத்த வாரம் பேசுவோம்

தொடர்புக்கு tajnoormd@gmail.com

‘கேமராவைக் கீழே வைக்க மாட்டேன்’

■ ம.மோகன் ■

சமுத்திரக்கனி, வேல ராமமூர்த்தி என்று தேர்ந்த நடிப்புக் கூட்டணியோடு வேட்டி சட்டை, வீரம் ததும்பும் கதை என்று இம்முறை கவனமாகக் களம் இறங்கி இருக்கிறார், விஜயகாந்தின் மகன் சண்முக பாண்டியன். அவருடன் உரையாடியதிலிருந்து...

கிராமம், ஜல்லிக்கட்டு, புழுதிச் சண்டை என்று இரண்டாவது படத்தில் வித்தியாசம் காட்டுகிறீர்களே?

மதுரை எங்கள் ஊர். அதுவும் சின்ன வயசுல இருந்தே எப்போது நேரம் அமைகிறதோ அப்போது எல்லாம் மதுரை, அதைச் சுத்தி இருக்கிற கிராமங்களுக்கு வந்து போய்க்கிட்டிருக்கேன். அதனாலேயே எனக்கு ‘மதுர வீரன்’

படத்தில் நடிக்கும்போது ஒரு மதுரை கிராமத்துப் பையன் உணர்வே இருந்தது. ஊர் பக்கம்போனதும், ‘நம்ம மாமன் மகன்

சண்முகம் வந்திருக்கான், நம்ம பாண்டி பேராண்டியாச்சே!’ என்று ஊர்க்காரர்கள் அன்பே என்னைச் சூழ்ந்தது. என்ன ஒண்ணு, சென்னையில் இருக்கும்போது ஜீன்ஸ் பேண்ட், டிசைன் டிசைனா சர்ட்னு இருப்பேன். அங்கே போனதும், வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டைனு மாறினேன்.

ஒளிப்பதிவாளர் பி.ஜி.முத்தையாவின் இயக்கம், பெரிய நடிகர்கள் என்று புதிய கூட்டணி அனுபவம் எப்படி இருந்தது?

இயக்குநர் முத்தையா அடிப்படையில் ஒளிப்பதிவாளர் என்பதால் ஒவ்வொரு கட்டத்தையும் நேர்த்தியாக உருவாக்கும் திட்டத்தோடு இறங்கினார். அவர் திட்டமிட்டு வேலை செய்யும்விதம் எனக்குப் பெரிய படிப்பினையாக இருந்தது. நிறையக் கற்றுக்கொண்டேன். படப்பிடிப்பில் சமுத்திரகனியிடம் பேசும்போது பொதுவிஷயங்கள், நாட்டு நடப்பு பற்றிய அவரது பார்வையில் நிறையத் தெரிந்து கொண்டேன்.

இது ஜல்லிக்கட்டைப் பற்றிய கதையா?

சின்ன வயதில் இருந்தே ஜல்லிக்கட்டு ரொம்பப் பிடிக்கும். இந்தப் படம் முழுக்க ஜல்லிக்கட்டும் அதன் பிரச்சினைகளையுமே பேசும். குறிப்பாக, ஜல்லிக்கட்டு விஷயத்தில் உள்ள அரசியல் பிரதானமாக இருக்கும். இந்தப் படத்துக்காக மக்களையும் காளைகளையும் ஒன்று திரட்டி புதிதாக ஜல்லிக்கட்டு போட்டி நடத்தி, படமாக்கினோம். இது நமது வீர விளையாட்டு, நமது பண்பாடு என்று மாணவர்களுக்கு ஒருமனதாக எப்படி உணர்வு வெளிப்பட்டு, அதன் வழியே போராட்டம் வெடித்தது என்பதையும் இதில் தொட்டிருக்கிறோம்.

அதுகூடவே காதல், சண்டை, வீரம், உறவுகளின் அன்பும் இந்தப் படத்தில் இருக்கும் மற்ற அம்சங்கள்.

‘மதுர வீரன்’ எம்.ஜி.ஆர் படத் தலைப்பு எப்படி??

எம்.ஜி.ஆரைப் பிடிக்காதவர்கள் யார் இருக்க முடியும். அதுவும் என் அப்பாவுக்கு அவ்வளவு பிடிக்கும். அவர்தான் எனக்கு எம்.ஜி.ஆர். படங்களைத் தேடித் தேடி பார்க்க வைத்தார். அவர் நடித்த படத்தின் தலைப்பில் நடிப்பதில் இன்னும் எனக்கு சந்தோஷம்.

பட வெளியீட்டு நேரத்தில் அமெரிக்காவில் சுற்றுகிறீர்களே?

சின்னச் சின்ன சொந்த வேலைகளுக்காக இங்கே தங்க வேண்டிய சூழல். பட வெளியீட்டு நேரத்தில் ஊரில் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறேன். அதற்குள் என் வேலைகளை இங்கே முடித்துக்கொண்டு சென்னைக்கு வந்து விடுவேன்.

நடிக்க வருவதற்கு முன் போட்டோகிராஃபியில் கவனம் செலுத்தி வந்தீர்களே?

‘மதுர வீரன்’ படப்பிடிப்பில் கூட கேமராவோடுதான் திரிந்தேன். ஏன், இங்கே இப்போது அமெரிக்காவில்கூட புகைப்படம் எடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். போட்டோகிராஃபி என்றதும் சிலர், ‘ஒளிப்பதிவாளர் ஆக வேண்டியதுதானே?’ என்கிறார்கள். அப்படி ஆவேனா, இல்லையா என்பதெல்லாம் இப்போது தெரியவில்லை. சின்ன வயதில் இருந்தே போட்டோ எடுப்பது என்றால் அவ்வளவு பிடிக்கும். ‘சினிமாவுக்கு வா!’ என்று அப்பா அழைத்ததால் நடிக்க வந்தேன். போட்டோகிராஃபி எப்போதும் என் கூடவே இருக்கும். அதை என்னால் விட முடியாது. கேமராவை எப்போதும் கீழே வைக்க மாட்டேன்.

அப்பாவின் வழியில் உங்களுக்கும் உங்கள் அண்ணன் விஜய்பிரபாகருக்கும் அரசியல் ஈடுபாடு உள்ளதா?

அண்ணன் ஒரு ஆர்கிடெக்ட். அதுவும் இப்போது முழுக்க விளையாட்டுத் துறையில் கவனம் செலுத்தி வருகிறார். என்னைப் பொறுத்தவரையில் நிறைய படங்களில் நடிக்க வேண்டும். அதுவும் அப்பா மாதிரி சினிமாவில் பெயர் வாங்க வேண்டும். இப்போது என் கவனம் முழுவதும் நடிப்பில் மட்டும்தான் இருக்கிறது.

▲ ‘மதுரவீரன்’ படத்தில் மீனாட்சி, சண்முகபாண்டியன்

வாசக சாலை

இந்து டாக்கீஸ் இணைப்பில் வெளியாகியுள்ள கட்டுரைகள் தொடர்பான விமர்சனம், மாற்றுக் கருத்து, பாராட்டு, கூடுதல் தகவல் என எதுவாக இருந்தாலும் உங்கள் கருத்தை எங்களுக்கு அனுப்புங்கள். உங்கள் கருத்து இப்பகுதியில் இடம்பிடிக்கும்.

முகவரி: **இந்து டாக்கீஸ்,** தி இந்து-தமிழ் நாளிதழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை-600 002, மின்னஞ்சல்: hindutalkies@thehindutamil.co.in

மிகச்சிறந்த பதிவு!

சமூகத்துக்கு எதிரான செயல்களை செய்யும் கதாபாத்திரங்கள், அவர்கள் நிகழ்த்தும் அட்டூழியங்களைத் துணிவுடன் எடுத்துக் கூறும் படங்கள், சாகசம் எதுவும் செய்யாத சாமனிய மனிதர்களை முதன்மைக் கதாபாத்திரங்களாக்கு முக்கியத்துவம் தரும் படங்கள் ஆகியவற்றுக்கு மக்கள் எப்போதுமே ஆதரவளிப்பார்கள். ஆமிர் கானின் வெற்றியே இதற்கு உதாரணம். இதைத் திறம்பட எடுத்துகாட்டிய ‘பிரமாண்டப் படவுலகின் யதார்த்த இழைகள்’ கட்டுரை மிகச்சிறந்த பதிவு.

– **ஏ.பி.எஸ்.ரவீந்திரன்,** வள்ளியூர்.

கலைந்த கனவு கட்டுரையில் நயன்தாராவை தற்காலத்தின் கனவுக்கன்னி என்று அறிவித்துவிட்டீர்கள். ‘மெர்சல்’ படத்தில் ‘ டேய் தம்பி’ இங்க வாடா’ என்று விஜயை அழைத்துக் கலாய்க்கும் சமந்தா உங்கள் நொள்ளைக் கண்ணுக்குத் தெரியவில்லையா? திருமணம் செய்துகொண்டபிறகும் மார்க்கெட் குறையாத கதாநாயகி அல்லவா சமந்தா. இந்து டாக்கீஸின் இந்த ஓரவஞ்சனையை வன்மையாகக் கண்டிக்கிறோம். கடந்தசில ஆண்டுகளாக அறிமுகமான கதாநாயகிகள் திரையில் ‘கவர்ச்சி’க்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். அதனால் ரசிகர்களை அவர்கள் தங்கள் திறமையால் ஈர்க்கமுடியாமல் போய்விட்டார்கள்.

– **ராஜசிம்மன்,** கிருஷ்ணகிரி

உதயநிதி ஸ்டாலின் நேர்காணல், ’நிமிர்’ படத்தில் அவர் கட்டியுள்ள வேஷ்டி போலவே பளிச்சென இருந்தது. கேண்டீன் மற்றும் பார்க்கிங் கட்டணம் ஆகியவற்றில் தயாரிப்பாளர்களுக்கு பங்குத் தொகை கிடைத்திட கூறிய அவரது யோசனை புதியது.

–**கே.ஆர். அசோகன்,** கிட்டம்பட்டி.

பொதுநலத்தில் நாட்டம் கொண்டவர்களை திரைப்படம் வழியே மக்களிடம் கொண்டுசெல்ல வேண்டும் என்று நினைத்த இளம் இயக்குநர் விக்கிக்குப் பாராட்டுக்கள். களத்தில் இறங்கிப் போராடும் டிராஃபிக் ராமசாமியையும் இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகரனையும் அவர் ஒப்பிட்டிருந்தது கொஞ்சம் ஓவர். என்றாலும் இந்த முயற்சிக்காகவே இதை மறந்துவிடலாம். எஸ்.ஏ.சி எப்படி நடித்திருக்கிறார் என்பதைக் காண ஆவலாக இருக்கிறேன்.

– **வே. ஈஸ்வரன்,** ராஜபாளையம்.

படிக்கும்போதே குபீர் சிரிப்பை வரவழைக்கும் கலைவாணரின் கிருஷ்ண பிடாரன் பட நகைச்சுவைக் காட்சி படத்தை நேரில் காணும்போது எப்படி இருந்திருக்கும்? நகைச்சுவையுணர்வு கொண்ட தாயின் வாரிசுக்குள் கலைவாணரின் நகைச்சுவைத் தாக்கம் புகுந்ததில் வியப்பேதுமில்லை!

–**கே.ராமநாதன்,** மதுரை.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனை இரண்டாம் ஜூகு ஏற்றுக்கொண்ட கோபுவின் கதை நகைச்சுவையும் சுவாரசியமும் வழிந்தோடுகிறது. கலைவாணர் தனது மனைவி மதுரத்துடன் ‘கல்கி’ கிருஷ்ணமூர்த்தியைக் காணச் சென்றிருந்தார். தம்பதியை வரவேற்ற கல்கியார், “டீ சாப்பிடுகிறீர்களா, காபியா?” என்று உபரிப்புடன் கேட்டார். அதற்கு கலைவாணர் “டி..ஏ.. மதுரம்” என்றார் இதுதான் டைமிங். கோபுவின் நகைச்சுவையில் அந்த டைமிங் இருந்ததா என்பதை அவர் எழுதிய படங்களைப் பற்றிக் கூறும்போது தெரியவரும்.

– **டி.கே.மூர்த்தி,** தலைஞாயிறு.

தணிக்கை வரை சென்ற கவிஞர் !

■ வா.ரவிக்குமார் ■

எம்.ஜி.ஆரின் திரைப்படங்களில் எம்.எஸ்.வியின் இசையில் பணிபுரிந்தவர் கவிஞர் முத்துலிங்கம். எம்.ஜி.ஆரின் நூற்றாண்டை ஒட்டி அவரைப் பேசவைத்தது மெல்லிசை மன்னர் ரசிகர் சங்க அறக்கட்டளை. ‘உழைக்கும் கரங்கள்’ படத்தில் ‘கந்தனுக்கு மாலையிட்டாள் கானகத்து வள்ளிமயில்’ என்ற பாடல் தொடங்கி, ‘மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்’ படம் வரைக்கும் எம்.ஜி.ஆர். நடித்த பல படங்களில் பாடல்களை எழுதியவர் கவிஞர் முத்துலிங்கம். தமிழக அரசின் அரசவைக் கவிஞர்களில் ஒருவராகவும் மேலவை உறுப்பினராகவும் இருந்த பெருமைக்கு உரியவர்.

சென்னை, மயிலாப்பூர் உள்ள ஆர்.கே.கன்வென்ஷன் அரங்கில் உட்கார இடமில்லாத அளவுக்குக் கூட்டம். ரசிகர்களின் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்.ஜி.ஆருக்கும் எம்.எஸ்.விக்கும் இதைவிட மரியாதையைச் செயல்பூர்வமாக எப்படிக் காட்ட முடியும்? வெங்கட் ஸ்ரீதர் சுவாரசியமாக நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். ஒலிப்பொறியாளர் சம்பத் அந்தக் காலத்தில் மோனோ டிராக்கிங் முறையில் செய்த ஒலிப்பதிவு முறைகளையும் விவரித்தார்.

பத்திரிகையாளராகப் பணியைத் தொடங்கி, ‘பொண்ணுக்குத் தங்க மனசு’ படத்தின் மூலம் பாடலாசிரியர் ஆனவர் முத்துலிங்கம். எம்.ஜி.ஆர். தான் நடித்த படங்களில் எல்லாம் தனக்குப் பாட்டெழுத வாய்ப்பளித்ததை, அந்தப் பாடல்களின் திரையிடலுக்குப் பின் நெகிழ்ச்சியோடு தனது உரையில் நினைவுகூர்ந்தார் முத்துலிங்கம்.

கோட்டையில் எந்தக் கொடி பறப்பது?

‘மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்’ படத்தில் ‘தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை’ என்னும் பாட்டில் ‘கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும்’ என்னும் வரி வரும். இந்த வரியால் சென்சாரில் ஏதாவது பிரச்சினை வந்தால் என்ன செய்வது? அதனால் ‘கோட்டையிலே மீன் கொடி பறந்திட வேண்டும்’ என மாற்றிவிடுங்களேன் என்றார் எம்.ஜி.ஆர்.

நான் பாட்டின் மீட்டருக்குச் சரியாக ‘மகர கொடி’ என்று போடலாமா? என்றேன்.

மீன் என்றாலும் மகரம் என்றாலும் ஒன்றுதானே … அப்படியானால், முன்பே உள்ள வரியோடு ஒருமுறையும், மகர கொடி என்று பாடி ஒருமுறையும் பாடலைப் பதிவுசெய்யுங்கள். சென்சாரில் பிரச்சினை வந்தால் சமாளிப்பதற்கு அது உதவும் என்றார் எம்.ஜி.ஆர். ஆனால், ‘கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும்’ என்னும் வரிகளை மட்டும் கொண்ட பாடல் மட்டுமே ஒலிப்பதிவு செய்யப்பட்டதை அறிந்த எம்.ஜி.ஆர், எம்.எஸ்.வியிடம் “நான் இரண்டு முறையில் ஒலிப்பதிவு செய்யச் சொன்னேனே” என்று சொல்லியிருக்கிறார்.

“நீங்கள் ஏற்றுக்கொண்ட வரிகள்தான் இவை என்று முத்துலிங்கம் சொன்னார்” என்று எம்.எஸ்.வி. தெரிவித்திருக்கிறார். படம் சென்சாருக்குச் சென்றது. எந்தப் பிரச்சினையும் இல்லாமல் வெளிவந்தது.

படத்தின் வரிகளை சென்சார் அதிகாரிகளிடம் காட்டி, படத்தின் சூழலை விளக்கி இந்த வரிகளால் ஏதாவது பிரச்சினை வருமா என்று அவர்களிடம் கேட்டு, இந்த வரிகளால் எந்தப் பிரச்சினையும் வராது என்று அவர்கள் உறுதி அளித்ததால்தான், கோட்டையிலே நமது கொடி பறக்க வேண்டும் என்னும் வரியையே மெல்லிசை மன்னரிடம் தெரிவித்தேன்.இந்த விஷயத்தைத் தெரிந்து கொண்ட எம்.ஜி.ஆர். படத்தின் வெற்றி விழாவில், “பாடலாசிரியர் என்றால் பாட்டை எழுதுவதோடு நிறுத்திக்கொள்வார்கள். நமக்காக சென்சார் அதிகாரிகளைப் பார்த்து, பேசி, அவர்களின் விளக்கத்தைப் பெற்று, இவ்வளவு வேலைகளை யார் பார்ப்பார்கள்? அதனால்தான் முத்துலிங்கத்துக்குத் தொடர்ந்து வாய்ப்பளித்து வருகிறேன்” என்றார். எனக்குப் பேச்சே வரவில்லை. அதுதான் எம்.ஜி.ஆர். என்றார் முத்துலிங்கம்.

▲ விழாவில் கவிஞர் முத்துலிங்கம்

தாய்க்கும் மகளுக்கும் ‘மா’

■ ம. சுசித்ரா ■

பெண்களின் பாலியல் சுதந்திரத்தைப் பேச முயன்று தமிழ் வலைவாசிகளின் கவனத்தை ஈர்த்து, சலசலப்பையும் ஏற்படுத்திய குறும்படம் ‘லட்சுமி’. இதன் இயக்குநர் சர்ஜுன் கே.எம். இயக்கத்தில் கடந்த வாரம் யூடியூபில் வெளியானது ‘மா’ என்ற புதிய குறும்படம். ‘என்னை அறிந்தால்’ படத்தில் அஜித்தின் மகளாக நடித்த அனிகா, இரண்டு முதன்மைக் கதாபாத்திரங்களில் ஒன்றில் நடித்துள்ளார்.

பத்தாம் வகுப்பு படிக்கும் விடலைப் பெண் கருவுறுகிறாள். தன்னுடைய தாயிடம் நடந்ததைச் சொல்ல இருவரும் இணைந்து சூழலை எதிர்கொள்வதுதான் ‘மா’ குறும்படத்தின் கதை.

நுட்பமான திரைமொழி

‘பாலியல் சுதந்திரம்’ என்ற கருத்தாக்கத்தைப் போலவே ‘பதின்பருவ கர்ப்பம்’ என்பதும் பொதுச் சமூகத்தில் பரபரப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தக்கூடிய தலைப்பே! சமூக ஒழுக்க மரபுகளை மீறும் எந்த ஒன்றும் நிச்சயம் எதிர்ப்பையும் சந்திக்கும் கவனத்தையும் ஈர்க்கும். அந்த வகையில் ‘லட்சுமி’ குறும்படம் இரண்டையும் பெற்றது. ஆனால், ஒரு கலைப் படைப்பு நேர்மையாக இருக்கும்பட்சத்தில் மட்டுமே அது சமூகத்தில் தாக்கம் செலுத்திக் காலத்தை வெல்லும். இத்தகைய புரிதலோடு அணுகினால் ‘லட்சுமி’ குறும்படத்தைக் கையாண்டவிதத்தைக் காட்டிலும் நுட்பமாக ‘மா’வில் திரைமொழி பேசியிருக்கிறார் இயக்குநர் சர்ஜுன்.

குறிப்பாகத் தாய்-மகள் உறவை நுணுக்கமாகப் படம் பதிவுசெய்திருக்கிறது. தன்னுடைய 15 வயது மகள் கர்ப்பமாக இருப்பது தெரியவந்ததும் முதலில் வெறுத்தொதுக்கும் தாய் பின்னர் அவளை அரவணைத்தல், மகளின் நிலையைக் கணவரிடம் சொல்லிவிடத் துடித்தாலும் அதன் பாதகத்தை எண்ணி அமைதி காத்தல், இறுதி காட்சியில் மகளை மீண்டும் நிமிர்ந்தெழ உத்வேகம் அளித்தல் என கம்பீரமாகத் தாய்மையைத் தன்னுடைய திறமையான நடிப்பால் வெளிப்படுத்தியிருக்கிறார் மலையாள நடிகை கனி கஸ்ருதி.

பெண்ணுக்காக, பெண்ணைப் பற்றி

இவை சாத்தியமாகக் காரணம் பிரியங்கா ரவிந்திரனின் திரைக்கதை. பிரியங்காவைப் பாராட்டும் அதே வேளை, திரைக்கதாசிரியராக ஒரு பெண்ணைக் கொண்டுவந்த இயக்குநருக்கும் பாராட்டுகள். பெண்மையை, பெண்களின் வாழ்வுலகை அவர்களின் அகவுலகை ஆண் மையப் பார்வையில் வெளிப்படுத்தும் கலை வெளிப்பாடுகள் முழுமையானவை என்று கூறிவிட முடியாது. திரைக்கதையும் இதற்கு விதிவிலக்கு அல்ல. சர்ஜுன் அவ்விதத்தில் ஒரு பெண் திறமையை இப்படத்துக்குப் பயன்படுத்திக்கொண்டிருப்பது நம்பகத்தின் அருகில் பார்வையாளர்களைக் கொண்டுவருகிறது.

ஆண் தன்மையில் திருப்பம்

தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை இது முதன்முறையாகப் பேசப்பட்டிருக்கும் கருப்பொருள் அல்ல. ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’ முதல் ‘ஆதலால் காதல் செய்வீர்’ வரை ஆண்கள் பெண்களை மயக்கித் தங்களுடைய வலைக்குள் விழ வைப்பதாகவே திருமணத்துக்கு வெளியே உருவாகும் பாலியல் உறவுகள் புனையப்பட்டு வந்திருக்கின்றன. இத்தகைய உறவில் பெண்களுக்குச் சம்மதமோ விருப்பமோ இருப்பதாகச் சொல்லும் துணிச்சல் அரிதாகவே வெளிப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ‘லட்சுமி’, ‘மா’ இரண்டு படங்களும் அத்தகைய மனத்தடையை மீறி உள்ளன. குறிப்பாக, ‘மா’வில் உள்ள ஹரி கதாபாத்திரம்

நிகழ்ந்தவற்றுக்குப் பொறுப்பேற்கும் காட்சி ஆண் தன்மை குறித்த புனைவில் முக்கியத் திருப்பம் அல்லது சோதனை முயற்சி எனலாம். அந்தத் தருணத்தில் படம், யார் மீதோ பழி போட்டுவிட்டு விலகி ஓட நினைக்காமல், பாலியல் கல்விக்கான தேவையை மறைமுகமாக வலியுறுத்துகிறது. அதே சோதனை முயற்சியைத் தந்தை கதாபாத்திரத்திலும் இயக்குநர் செய்திருக்க வேண்டும். ஆனால், அவரோ ஹாக்கி வீராங்கனையான தன்னுடைய மகளின் விளையாட்டுப் பயிற்சிக்கான உடையை குறைபேசுவது, தனக்கு வரும் அலைபேசி அழைப்பில் சக ஆசிரியரிடம் ஆண்-பெண் நட்பைக் கொச்சைப்படுத்துவது என்பதாகவே சித்தரிக்கப்பட்டிருக்கிறார்.

இத்தனை குறைகளையும் கடந்து பதின்பருவ பாலியல் சிக்கலையும் தாய்-மகளுக்கு இடையிலான புரிதலையும் நுட்பமாகத் திரையில் பேச முயன்றிருக்கிறது ‘மா’.

‘கர்ணனாக அவதாரம் எடுக்கிறேன்’

■ மஹா ■

“நடிகனாக 152 படங்கள், இயக்குநராக 14 படங்கள், 90-களின் தொடக்கத்தில் இருந்து திரைக் கதை, எழுத்து, தயாரிப்பு என்று இந்த சினிமாவில் பரபரப்பாக ஓடிக்கொண்டே இருப்பதும், வித்தியாசமாக ஏதோ ஒன்றைத் தொட்டுக்கொண்டிருப்பதும் ஒரு அலாதியான விருப்பமாகவே இருக்கிறது” - கண்களை அகல விரித்து, புருவங்களை உயர்த்திப் பேசத் தொடங்குகிறார் ‘சொல்லி விடவா’ படத்தை இயக்கி முடித்திருக்கும் ‘ஆக்ஷன் கிங்’ அர்ஜுன். அவருடன் தொடர்ந்து உரையாடியதிலிருந்து...

எந்தவகைப் படம் எடுத்தாலும் அதில் தேசப்பற்று என்ற விஷயத்தைப் புகுத்திவிடுகிறீர்களே?

எந்த மாதிரியான கதையை யோசித்தாலும் ஏதாவது ஒரு நல்ல விஷயம் அதில் இருக்க வேண்டும் என்றே சிந்தனை படர்கிறது. அதை எனது முத்திரை என்று எல்லோரும் சொல்லுகிற நாட்டுப் பற்றாகவே இருக்கட்டுமே என்று நானும் இறங்கிவிடுகிறேன். இந்தப் படத்திலும் காதலோடு சேர்ந்து ராணுவப் பின்னணி இருக்கிறது.

‘சொல்லிவிடவா’ படத்தின் கதை என்ன?

1999 –ம் ஆண்டில் நடக்கும் கதை. திரைக்கதைக்கு ஒரு பீரியட் தேவைப்பட்டது. நாயகன், நாயகி இருவரும் ஒரு தொலைக் காட்சியில் வேலை பார்க்கிறார்கள். இருவரும் சேர்ந்து பணி நிமித்தமாக வெளியே செல்லும்போது நடக்கும் நிகழ்வுகள் அவர்களைக் காதலர்களாக மாற்றுகின்றன. அந்தக் காதலோடு சேர்ந்து ராணுவ விஷயத்தையும் தொட்டிருக்கிறேன். என்னுடைய ‘ஜெய்ஹிந்த்’ படத்தை மறக்கடிக்கும் வகையில் ராணுவத்தின் மதிப்பை, அதன் முக்கியத்துவத்தைச் சொல்லும் விதத்தில் வித்தியாசமாகக் கையாண்டிருக்கிறேன்.

‘சொல்லிவிடவா’ படத்தில் சந்தன்குமார், ஐஸ்வர்யா அர்ஜுன்

> ● எனக்குச் சண்டை எவ்வளவு பிடிக்குமோ அந்த அளவுக்கு காமெடியும் பிடிக்கும். அதனால்தான் போலீஸ், ராணுவம் என்று த்ரில்லர் கதைக் களங்களைக் கொண்ட படங்களில் கூட காமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பேன்.

உங்கள் இயக்கத்தில் மகள் ஐஸ்வர்யா அர்ஜுன். நீங்கள் சொன்னதை முழுமையாக ஏற்று நடித்திருக்கிறாரா?

மகள் என்பதற்காக ஏதோ வந்துவிட்டு செல்வதைப் போன்ற கதாபாத்திரம் அவருக்குக் கொடுக்கவில்லை. அவரிடம் மூன்று கதைகள் சொன்னேன். முதலில் இந்தக் கதையைத் தொடுவோம் என்று அவரே தேர்வு செய்த கதை இது. அவருக்குச் சவாலான கதாபாத்திரம். முழுமையான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்தப் படத்தில் நீங்கள் ஏன் நடிக்கவில்லை?

களம் அந்த மாதிரி உருவானது.

பேட்டி: அர்ஜுன்

படத்தில் ஒரே ஒரு பாடலில் மட்டும் முகம் காட்டுவேன். அதுவொரு ஆஞ்சநேயர் பாடல்.

‘இரும்புத்திரை’ படத்தில் நீங்கள் வில்லனாமே?

வித்தியாசமான கதாபாத்திரம். அதுவும் புத்திசாலித்தனம் மிகுந்த கதாபாத்திரம். அதற்கு நான்தான் சரியாக இருப்பேன் என்று விஷால் ஆசைப்பட்ட கதாபாத்திரம். 150-க்கும் அதிகமான படங்களில் நடித்துவிட்டோம். இனி வித்தியாசமாக இறங்குவோம் என்று இதில் தொடங்கியிருக்கிறேன். ஒரு படத்தில் வில்லன் என்றால் அதே மாதிரி கதாபாத்திரங்களில் மட்டுமே நடிக்க மாட்டேன். அடிப்படையில் எழுத்து, தயாரிப்பு, இயக்கம் என்று வகுத்துக்கொண்டதால் ஹீரோ, வில்லன், குணச்சித்திரம் என்று என்னால் எதிலும் நடிக்க முடிகிறது. அடுத்து பலகோடி ரூபாய் பட்ஜெட்டில் உருவாகும் ஒரு கன்னடப் படத்தில் ‘கர்ணன்’ அவதாரம் எடுக்கிறேன்.

உங்களிடம் உதவி இயக்குநராக இருந்த விஷால் இன்று கதாநாயகன் என்பதைத் தாண்டி வளர்ந்திருக்கிறாரே?

நல்ல விஷயம். விஷால் என்னிடம் இருந்த காலகட்டத்தில் அவரது முயற்சிகளைப் பார்த்து நானே அவருடைய அப்பாவிடம், ‘எதிர்காலத்தில் இவர் நல்ல நடிகராக வருவார். நடிக்க அனுப்புங்க?’ என்று கூறியிருக்கிறேன். அதே மாதிரி இன்று அவர் வளர்ந்து வருவது மகிழ்ச்சியாக இருக்கிறது. எந்த ஒரு விஷயத்துக்கும் முயற்சிதான் முக்கியம். அது அவரிடம் இருப்பதால் வெற்றி கிடைக்கிறது.

‘இந்தியன் 2’ படத்தைப் போல ‘முதல்வன் 2’ தயாராக வாய்ப்பு உள்ளதா?

இது இயக்குநர் ஷங்கருக்கான கேள்வி.

‘ஆக்ஷன் கிங்’ என்று பெயர் வாங்கியிருந்தாலும் வடிவேலு, கவுண்டமணி, செந்தில் ஆகியோருடன் நீங்கள் நடித்த நகைச் சுவைக் காட்சிகள் நன்கு ரசிக்கப்படுவதைக் கவனித்திருக்கிறீர்களா?

எனக்குச் சண்டை எவ்வளவு பிடிக்குமோ அந்த அளவுக்கு காமெடியும் பிடிக்கும். அதனால்தான் போலீஸ், ராணுவம் என்று த்ரில்லர் கதைக் களங்களைக் கொண்ட படங்களில்கூட காமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பேன். நான் நடிக்கும் படங்களிலும் காமெடி கொஞ்சம் அதிகம் இருக்க வேண்டும் என்று நினைப்பேன். அந்த ஈடுபாடுதான் இதற்குக் காரணம்.

ஓர் உளவுப் பெண்ணின் உலகம்

■ எஸ்.எஸ்.வாசன் ■

உளவாளிகள் புழங்கும் உலகம் மிகவும் மோசமானது. உளவாளி, பெண்ணாக அமையும்போது அந்த உலகம் இன்னும் இருள் சேர்ந்திருக்கும். தனிப்பட்ட நெருக்கடியால் உளவாளியாக உருவெடுக்கும் ஒரு பெண், இரு நாட்டு உளவு அமைப்புகள் இடையே மாட்டிக் கொண்டு மீள முயலும் திரில்லர் திரைப்படமே ‘ரெட் ஸ்பாரோ’. மார்ச் 2 அன்று இப்படம் வெளியாக உள்ளது.

துடிப்பான இளம்பெண் தன் தாயின் உடல்நிலை காரணமாக ரஷ்யாவின் ரகசிய உளவு அமைப்பில் சேர வேண்டியதாகிறது. அங்கே பயிற்சிபெறும் பெண் ஒற்றர்களுக்கு, முக்கிய ஆயுதமாக அவர்களின் இளமையை முன்னிறுத்தியும் எதிரிகளை வீழ்த்தக் கற்றுத் தருகிறார்கள். சிறப்பான உளவாளியாகத் தேறி சாகசங்களை ஒவ்வொன்றாக அப்பெண் நிகழ்த்தும்போது தான் புதைகுழியில் சிக்கியிருப்பது தெரிய வருகிறது. சுதாரித்து அவள் விலக முற்பட்டாலும் உளவு அமைப்பு அவளை விடுவதாக இல்லை.

இந்நிலையில் அவள் வீழ்த்தக் கிளம்பிய அமெரிக்க சி.ஐ.ஏ. அமைப்பின் டபுள் ஏஜெண்ட் ஒருவரிடமிருந்தே உதவிக்கரம் நீளுகிறது. மறுபக்கம் பணிகொடுத்த உளவு நிறுவனம் அவளை வேட்டையாடத் துரத்துகிறது. இருதரப்புக்கும் இடையே அந்தப் பெண் உளவாளி தன்னைத் தக்கவைத்துக்கொள்ளத் தொடரும் சாகசங்களே மீதிக் கதை.

சி.ஐ.ஏ நிறுவனத்துக்காகப் பணியாற்றிய ஜேசன் மாத்யூஸ் என்பவர் எழுதிய இதே தலைப்பிலான நாவலைத் தழுவி ‘ரெட் ஸ்பாரோ’ திரைப்படம் உருவாகி உள்ளது. படத்தின் பிரதான பாத்திரமான ரஷ்யப் பெண் உளவாளியாக ஜெனிஃபர் லாரன்ஸ் நடித்துள்ளார். உடன் ஜோ எட்கர்டன் (Joel Edgerton), சார்லட் ராம்ப்லிங், மேரி லூயிஸ் பார்கர் உள்ளிட்டோர் நடிக்க, ஃபிரான்சிஸ் லாரன்ஸ் இயக்கியுள்ள இப்படம், போகிறபோக்கில் வல்லரசு நடத்திவரும் உளவு அமைப்புகளின் உண்மை முகத்தையும் தோலுரிக்கிறது.

இப்படத்தின் ட்ரைலர் வெளியானதைத் தொடர்ந்து, மார்வெல் காமிக்ஸ் படைப்பான ‘பிளாக் விடோ’ சாகசக் கதாபாத்திரத்தை ‘ரெட் ஸ்பாரோ’ கையாண்டிருப்பதாக எழுந்த எதிர்மறை விமர்சனங்களே படத்துக்கு விளம்பரமாக அமைந்துவிட்டன.

ஹாலிவுட் ஜன்னல்

பிரிந்த நண்பர்கள்... ஒளிர்ந்த நட்பு!

சித்ராலயா 03

■ டி.ஏ. நரசிம்மன் ■

ஸ்ரீதரும் கோபுவும் ஐந்தாம் வகுப்பில் தொடங்கி ஒன்றாகப் படித்தவர்கள். கோபுவின் வீடு செங்கல்பட்டு சின்னமணிக்காரத் தெருவில் இருந்தது. ஸ்ரீதரின் வீடு மறுகோடியில் நத்தம் என்ற பகுதியிலும் இருந்தது. பள்ளிவிட்டால் நண்பன் கோபுவைத் தேடி வந்துவிடுவார் ஸ்ரீதர். ஒன்பதாவது படிக்கும்போது ஸ்ரீதருக்குக் கலையார்வம் துளிர்த்தது. மனோகரா என்னும் நாடகத்தை எழுதி, பள்ளி ஆண்டு விழாவில் அரங்கேற்றினார். அதில் ஸ்ரீதர் கதாநாயகனாகத் தோன்ற, அதே நாடகத்தில் காமெடியன் ரோலில் சக்கை போடு போட்டார் கோபு. அதுமட்டுமல்ல; நாடகத்தின் நகைச்சுவைப் பகுதியை கோபுதான் எழுதினார். ஸ்ரீதர்-கோபு கூட்டணி முதல்முதலாக உருவானது பள்ளியாண்டு விழாவில்தான். இவர்கள் இருவருடன் ரங்கநாதன் என்ற மாணவனும் படித்தார். இவர்தான் ‘கடுகு’ அகஸ்தியன் என்ற பிற்கால எழுத்தாளராக உருவெடுத்தார். இவர்கள் எல்லாரும் ஒன்றாகக் கூடிவிட்டால் அவர்கள் இருக்கும் இடம் கணஜோராகக் களை கட்டிவிடும். அடிக்கடி சாகசங்களிலும் இறங்கிவிடுவார்கள்.

காப்பாற்றிய கதாநாயகன்

அப்போது பாலாற்றுக் கரையில் மாந்தோப்புகள் நிறைய உண்டு. அந்தத் தோப்பு மாங்காய்களைத் திருடி அவற்றைத் துவைக்கிற கல்லில் உடைத்து உப்புக்கல் வைத்துத் தின்றால்தான் ருசி. தோட்டக்காரர் இல்லாத சமயத்தை உளவறிந்து மாங்காய் அடிக்கச் செல்ல வேண்டும். அப்படி மதிய சாப்பாட்டுக்கு அவர் சென்றிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு ஸ்ரீதரும் கோபுவும் தோப்புக்குள் நுழைந்து மாங்காய் அடித்துக் கொண்டிருந்தார்கள். மாயக்காரன் மாதிரி அங்கே திடீரென்று வந்து நின்றார் தோட்டக்காரர். ஸ்ரீதர் உட்பட எல்லோரும் அலறி அடித்து ஓட்டம்பிடித்துவிட, சுதாரிப்பதற்குள் கோபுவைக் கொத்தாகப் பிடித்துக்கொண்டார் தோட்டக்காரர். பள்ளிக்கூடப் பிள்ளை என்று கூடப் பார்க்காமல் கோபுவின் முதுகை மத்தளம் ஆக்கினார் தோட்டக்காரர். இரக்கமில்லாத தோட்டக்காரர் ஆத்திரம் அடங்காமல் மாங்காய் திருடிய கள்வர்களின் தலைவனைப் பிடித்துவிட்டதுபோன்ற கர்வத்துடன் கோபுவை மரத்தில் கட்டிப் போட்டார். ஆனால், கோபுவுக்கு நண்பன் மீது நம்பிக்கை இருந்ததால் மரங்களில் தொங்கிக்கொண்டிருந்த மாங்காய்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஸ்ரீதர் தனக்குத் தெரிந்த ஒரு பெரிய மனிதரை அழைத்து வந்து கோபுவை மீட்டுக் கொண்டுபோனார்.

“என்னை மரத்தில் கட்டிப் போட்ட விவகாரத்தை யாரிடமும் சொல்லக் கூடாது” என்று சத்தியம் செய்யச் சொன்னார் கோபு. ஸ்ரீதரும் சத்தியம் செய்துகொடுத்தார். ஆனால், மறுநாள் பள்ளிக்கூட மணியை அடித்துக்கொண்டே பியூன் கோபுவைப் பார்த்து “இன்னா கோபு, மாந்தோப்புல செம மாத்து மாத்திட்டாங்களாமே?” என்றான். அவன் கேட்ட விதம் பள்ளிக்கூடம் முழுவதும் மணியடித்துச் சொல்லி விட்டேன் என்பது போல இருந்தது கோபுவுக்கு.

“என்னடா ஸ்ரீ! நீ செய்த சத்தியம் அவ்வளவுதானா?” கோபு கோபத்துடன் கேட்டார்.

“டேய் நீ மாட்டிக்கிட்டதும் உன்னைக் காப்பாத்தனுமேன்னுதான் நான் தப்பிச்சுப்போனேன். நானும் உன்னோட மாட்டியிருந்தா நம்மள யார் காப்பாத்தியிருப்பா சொல்லு?” என்று ஸ்ரீதர் பதில் சொன்னதும் கோபுவுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

கோபுவும் ஸ்ரீதரும்

கேள்வித்தாள் வள்ளல்

பள்ளித்தேர்வு நேரம் நெருங்கிவிட்டால் காமெடியன் கோபு ஹீரோவாக மாறிவிடுவார். கோபுவுடைய தந்தை துரைசாமிதான் இருவருக்கும் வகுப்பு வாத்தியார். அவர் வீட்டு பீரோவில்தான் கேள்வித்தாள்கள் அடங்கிய பைலை வைத்திருப்பார். ஸ்ரீதர் கோபுவை விசேஷமாகக் கவனிப்பார். கோபுவும் பீரோவைத் திறந்து தன் அப்பாவுக்குத் தெரியாமல் கேள்வித்தாள்களில் ஒன்றை உருவிடுவார். கேள்வித்தாள் இருந்து விட்டால் போதுமா, புத்தகத்தில் பதில்கள் எங்கே இருக்கின்றன என்று தேட வேண்டுமே! ஸ்ரீதரும் கோபுவும் ரங்கநாதனைத் தேடி ஓடுவார்கள். கையில் கேள்வித்தாள் கிடைத்ததும் ஸ்ரீதரும் கோபுவும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை தாண்டவே மாட்டார்கள். இருவரும் பார்டர் மார்க் மேதாவிகள். ஆனால், ரங்கநாதன் மட்டும் சென்டம் வாங்கிவிடுவார்.

கோபுவையும் ஸ்ரீதரையும் குறித்து துரைசாமி வாத்தியாருக்கு எந்தச் சந்தேகமும் எழவில்லை. ஆனால், ரங்கநாதன் சென்டம் வாங்குவதைப் பார்த்து வியந்துபோன அவர், அந்தத் தகிடுதத்தத்தின் சூத்திரதாரிகள் கோபுவும் ஸ்ரீதரும் என்று தெரிந்து சுதாரித்துக்கொண்டார் வாத்தியார். தேர்வு நேரங்களில் கோபுவை வீட்டுச் சிறையில் தள்ளிவிடுவார். ஆனால், கோபு அசர மாட்டார். புழக்கடையிலிருந்து சின்ன சின்ன கற்களைப் பொறுக்கி வைத்து, கேள்வித்தாள்களைக் கல்லில் சுற்றி மடித்து வீதியில் எறிவார். ஸ்ரீதர் அதை லாகவமாகப் பிடித்து, ரங்கநாதனிடம் கொண்டுபோய்ச் சேர்த்து அவர் இரக்கப்பட்டுத் தரும் பார்டர் மார்க் பதில்களை மட்டும் தெரிந்துகொண்டு பதில்களை எழுதி, நண்பனுக்காக மீண்டும் கோபுவின் வீட்டு மாடியை நோக்கி கல்லில் எறிய, கோபு அதைத் தாவிப் பிடிப்பார். இந்தப் பரிமாற்றத்தில் தொடங்கிய இவர்களது லட்சியக் கூட்டணி, பின்னாளில் கதை-வசன தாள்களின் பரிமாற்றத்தில் முடியும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்களா என்று தெரியவில்லை.

‘காசேதான் கடவுளடா’ படத்தில் லட்சுமி, முத்துராமன், ‘தேங்காய் சீனிவாசன், ஸ்ரீகாந்த்

> ● ஐந்தாம் வகுப்பில் தொடங்கி ஸ்ரீதரும் கோபுவும் ஒன்றாகப் படித்தவர்கள்.
> ● ஸ்ரீதர் -கோபு கூட்டணி பள்ளி ஆண்டு விழா நாடகத்திலேயே தொடங்கிவிட்டது.
> ● பள்ளி இறுதி வகுப்பு முடிந்ததும் ஸ்ரீதர் அரசு வேலைக்குச் சென்றுவிட, கோபுவை அவரிடமிருந்து பிரிப்பதற்காக காரைக்குடிக்கு நாடு கடத்தினார்கள் பெற்றோர்.

பிரிந்த நண்பர்கள்

பள்ளி இறுதி வகுப்பு முடிந்ததும் ஸ்ரீதருடைய அப்பா அவரைக் கூட்டுறவு அலுவலகத்தில் வேலையில் அமர்த்திவிட்டார். ஸ்ரீதருடன் திரிந்துகொண்டிருந்த கோபுவை எப்படியாவது பிரித்துவிட வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக அவரைக் காரைக்குடிக்கு நாடு கடத்துவதுபோல அழைத்துச் சென்று அழகப்பா கல்லூரியில் இன்டெர்மீடியேட் படிப்பில் சேர்த்தனர். இதற்கு கோபு ஒப்புக்கொள்ள மாட்டார் என்று தெரிந்துகொண்ட கோபுவின் பெற்றோர், அழகப்பா கல்லூரில் புகழ்பெற்ற கிரிக்கெட் டீம் இருப்பதை எடுத்துக்கூறி ஆசை காட்டி அவரைக் கல்லூரியில் அடைத்துவிட்டு வந்தார்கள். அதை உண்மை என்று நம்பிய கோபு, கல்லூரியின் கிரிக்கெட் அணியில் சேர்ந்து திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி வெல்வதற்குக் காரணமாக இருந்தார். ஆனால், நண்பன் ஸ்ரீதர் நம் அருகில் இல்லையே என்ற கவலை அவரை அரித்துக்கொண்டேதான் இருந்தது.

அங்கிருந்து கோபுவுக்கு கடிதங்கள் எழுதி தனது நட்பைப் பத்திரமாக வைத்துக்கொண்டார். காரைக்குடியில் கோபு படித்துக்கொண்டிருந்தபோது அழகப்பா கல்லூரியின் பொறியியல் துறை கட்டிடத்தைத் திறப்பதற்காக வந்திருந்தார் பிரதமர் ஜவாஹர்லால் நேரு. சிவப்பு சிங்கமாக நின்றிருந்த காஷ்மீர் ஆப்பிள் நேருவைத் தொட்டுக் கைகுலுக்கி, நண்பன் ஸ்ரீதரிடம் பீற்றிக்கொள்ள வேண்டும் என்ற ஆசை. ஆனால், நேருவை நெருங்க முடியவில்லை. மானசீகமாக நேருவின் கையைக் குலுக்கிவிட்டு, அவர் கல்லூரிக்கு வந்து சென்ற நிகழ்வை நண்பனுக்கு கோவையாக எழுதி அனுப்பினார். அவ்வளவு சீக்கிரம் பாராட்டிவிடாதவர் ஸ்ரீதர், ‘நானே நேருவைக் கண்டதுபோல் நல்ல வர்ணனையில் எழுதியிருக்கிறாய் சினேகிதா’ என்று ஸ்ரீதரிடமிருந்து பாராட்டு வரிகளுடன் பதில் வந்தது.

காரைக்குடியில் கோபு தங்கியிருந்த இடத்தின் பெயர் கல்லுக்கட்டி. அங்கிருந்த குளக்கரை எதிரில் இருந்த ஏ.வி.எம் சன்ஸ் கட்டிடத்தின் மாடியில்தான் நண்பர்களோடு தனது அறையைப் பகிர்ந்திருந்தார் கோபு. ‘வேதாள உலகம்’, ‘வாழ்க்கை’ போன்ற ஏ.வி.எம்மின் படங்களை அங்கிருந்த சரஸ்வதி தியேட்டரில் பார்த்த கோபு, எப்படியாவது ஏ வி எம் செட்டியாரைச் சந்தித்து அவரைப் பாராட்ட வேண்டும் என்று நினைத்திருந்தார். ஆனால், பிற்காலத்தில் ‘காசேதான் கடவுளடா’ நாடகத்தை ஏ.வி.எம். செட்டியார் வாங்கி, திரைப் படமாகத் தயாரித்து, அதைத் தன்னையே இயக்கச் சொல்வார் என்று கோபு சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. விதி இப்படித்தான் சிறு சிறு சம்பவங்களின் மூலமாக எதிர்காலத்துக்குக் கட்டியம் கூறும் என்பதை கோபு அப்போது உணர்ந்திருக்கவில்லை.

சிரிப்பு தொடரும்

தொடர்புக்கு: tanthehindu@gmial.com